# இன்டீரியரோ அல்லது எக்ஸ்டீரியரோ, டெக்ஸ்டுரா எப்போதுமே சுப்பீரியர்!

**மலிவான | மல்டிகலர் ஃப்ரீடம் | ஏராளமான டிசைன்கள்**




***20kg மற்றும் 25kg-ல் கிடைக்கிறது***




# ட்ரவ்ல் ஃபினிஷ்

பிர்லா ஒயிட் டெக்ஸ்டர் ட்ரவ்ல் ஃபினிஷ் ரஸ்டிக் ஃபினிஷ் என்றும் அழைக்கப்படுகிறது. இது வெளிப்புறச் சுவர்களுக்குப் சிறப்பாகப் பொருந்தும் ஃபினிஷ் ஆகும். இதன் விசேஷ சேர்க்கை காலநிலையின் பாதகமான விளைவுகளிலிருந்து பாதுகாப்பாக வைத்திருக்கிறது. நீங்கள் உங்கள் வீட்டிற்கு சர்வதேச தரத்தைக் கொடுக்கும் பல்வேறு ஷேட்கள் மற்றும் டெக்ஸ்டர்களிலிருந்து ஒன்றை சௌகரியமாகத் தேர்வு செய்து கொள்ளலாம். ட்ரவ்ல் ஃபினிஷை சிெ மன்ட் பிளாஸ்டர்கள், ஃபினிஷ் கான்க்ரீட் போன்றவற்றில் பயன்படுத்தலாம். இது தண்ணீர் புகாமல் தடுக்கக் கூடியது. எனவே இதனை ஈரமான மேற்பரப்பிலும் பயன்படுத்தலாம். இது ஒட்டிக்கொள்ளும் வலுவை அதிகரிக்கிறது. மேலும் இது சிமென்ட்டை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும் காய வைக்க வேண்டிய தேவை இல்லாமலேயே வேலை செய்கிறது. இதன் மூலம் நீங்கள் உங்கள் வெளிப்புறச் சுவர்களுக்கு சிறந்த ஃபினிஷை பெறுகிறீர்கள்.

## தொழில்நுட்ப அளவீடுகள்

| வ. எண். | தொழில்நுட்ப அளவீடுகள் | குறியீடுகள் | நிறுவனத்திற்குள் |
|---|---|---|---|
| 1 | *பரப்பளவு (Sq.m/kg/coat)<br>[வழவழப்பான மேற்பரப்புக்குக் சிறந்தது] | 0.33-0.42 | வீட்டுக்குள்ளேயானது |
| 2 | வாளியில் வைத்திருக்கும் நேரம் (மணி) | 1.5 - 2.0 | வீட்டுக்குள்ளேயானது |
| 3 | டென்சில் ஸ்ட்ரென்த் @28 நாட்கள் (N/mm2) | ≥0.5 | EN 1348 |
| 4 | தண்ணீர் உறிஞ்சுதல் (மிலி), 30 நிமிடங்கள், @28 நாட்கள் | ≤0.60 | கர்ஸ்டீன் டியூப் |
| 5 | மொத்த அடர்த்தி (g/cm3) | 1.3 - 1.7 | வீட்டுக்குள்ளேயானது |

*இந்த மதிப்பு வழவழப்பான மேற்பரப்புக்கானது. இருந்தாலும் இது மேற்பரப்பின் தன்மைக்கு ஏற்ப மாறக் கூடியது.

## பயன்படுத்தும் முறை:

### 1. மேற்பரப்பைத் தயார் செய்தல்:

- பொருத்தமான எமரி பேப்பர், புட்டி பிளேடு அல்லது கம்பி பிரஷ் போன்றவற்றைப் பயன்படுத்தி மேற்பரப்பில் தளர்ச்சியாக ஒட்டியுள்ள அழுக்கு, தூசி எண்ணெய் பசை போன்ற எல்லாவற்றையும் அகற்றவும்.
- மேற்பரப்பில் உள்ள குறைபாடுகளான துளைகள், பள்ளங்கள் மற்றும் விரிசல்கள் போன்றவற்றை டிரோவல் ஃபினிஷை பயன்படுத்துவதற்கு முன்பாக நிரப்ப வேண்டும்.

### 2. மேற்பரப்பை முன்னதாக ஈரமாக்குதல்:

பயன்படுத்திய அடி மூலக்கூறுடன் சிறந்த ஸ்மூத்னெஸ், வேலைத்திறன், கவரேஜ் மற்றும் அதிக பிணைப்பு வலிமையைப் பெற, கான்க்ரீட் / பிளாஸ்டர் மேற்பரப்பில் ''டிரோவல் ஃபினிஷை'' பயன்படுத்துவதற்கு முன்பாக, முன்கூட்டியே ஈரமாக்குதல் முக்கியமானது.

### a. கலவை விகிதம்:

22 முதல் 25% சுத்தமான தண்ணீரைக் கலந்து, ஒரே மாதிரியான பேஸ்ட்டைப் பெறுங்கள். இதன் விளைவாக அதிக கவரேஜ் மற்றும் ஸ்மூத் யூனிஃபார்ம் ஷேடை பெறலாம். தண்ணீரில் கலந்த பின்பு 1-2 மணி நேரத்திற்குள் பயன்படுத்தக் கூடிய அளவை மட்டுமே தயார் செய்யவும்.

### b. பயன்படுத்தும் முறை:


- தயாரிப்பை 2-3 மிமீ தடிமன் அளவில் பயன்படுத்துங்கள் மற்றும் ஒரேமாதிரியான மேற்பரப்பிற்காக அதிகப்படியான பொருளை அகற்றுங்கள்.
- மேற்பரப்பு 5-10 நிமிடங்கள் உலர அனுமதியுங்கள்.
- டிசைன்களை உருவாக்க ஃபைபர் டிரோவலைப் பயன்படுத்தவும்.



**பயன்படுத்தும் முறை**

டிசைன்களை உருவாக்க ஃபைபர் டிரோவலைப் பயன்படுத்தவும்.






வெர்டிகல் டெக்ஸ்சர்டு ஃபினிஷைப் பெற, ஃபைபர் டிரோவலை மேலிருந்து கீழாக நேராக நகர்த்தவும்.


**வெர்டிகல் பினிஷ்**
**BWTF1001**






கிராஸ் டெக்ஸ்சர்டு ஃபினிஷைப் பெற, ஃபைபர் டிரோவலை குறுக்காக வலமிருந்து இடமாகவும், குறுக்காக இடமிருந்து வலமாகவும் நகர்த்தவும்.

**கிராஸ் பினிஷ்**
**BWTF1002**





பிளஸ் மைனஸ் டெக்ஸ்சர்டு ஃபினிஷைப் பெற, ஃபைபர் டிரோவலை செங்குத்தாக மேலிருந்து கீழாகவும், கிடைமட்டமாக இடமிருந்து வலமாகவும் நகர்த்தவும்.

**பிளஸ்-மைன பினிஷ்**
**BWTF1003**






ரெயின் ஃபால் டெக்ஸ்சர்டு ஃபினிஷை பெற ஃபைபர் டிரோவலை மேலிருந்து கீழாக குறுக்காக நகர்த்தவும்.

**ரெயின் ஃபால்**
**BWTF1004**






கிடைமட்ட டெக்ஸ்சர்டு ஃபினிஷைப் பெற, ஃபைபர் டிரோவலை செங்குத்தாக வலமிருந்து இடமாக அல்லது இடமிருந்து வலமாக நகர்த்தவும்.

**கிடைமட்ட பினிஷ்**
**BWTF1005**





ஃபைபர் டிரோவலை ஒரு தோராயமான வட்டத்தில் அல்லது சுழலும் இயக்கத்தில் நகர்த்தவும்.

**ஸ்விர்லி பினிஷ்**
**BWTF1006**

- பெயிண்ட்/டிஸ்டம்பரைப் பயன்படுத்துவதற்கு 10-12 மணி நேரத்திற்கு முன் மேற்பரப்பை உலர விடவும்.
- மேலே உள்ள படங்களில் காட்டியுள்ளபடி விரும்பும் பெயின்ட்களைப் பயன்படுத்துங்கள் அல்லது இறுதி ஃபினிஷை பெற நீங்கள் விரும்பும் கலர் பெயின்ட்டை தேர்வு செய்யவும்.




# ரோலர்/ ஸ்பிரே ஃபினிஷ்

பிர்லா ஒயிட் டெக்ஸ்டரா ஸ்பிரே / ரோலர் ஃபினிஷ் உட்புறங்களுக்கான சிறந்த, மென்மையான மற்றும் இனிமையான ஃபினிஷை கொடுக்கக் கூடியது. இது உங்கள் சுவர்களுக்கு பெயின்ட்டின் கவர்ச்சியை விட ஒட்டுமொத்த அறைக்குமான வசீகரத்தைக் கொடுத்து மிகவும் அழகாக்குகிறது. நீங்கள் இதனை பலவகை நிறங்கள், ஷேட்களில் பயன்படுத்தலாம். இந்த ஃபினிஷை ஈரமான சுவர்களிலும் பயன்படுத்தலாம். மற்ற அக்ரிலிக்கை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகளைப் போலல்லாமல், ரோலர் ஃபினிஷ் கூடுதல் ஒட்டும் வலுக் கொண்டதாக உள்ளது. இது காலநிலை விளைவுகளை எதிர்க்கிறது. அதோடு, இது சிமென்ட்டை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும், இதற்கு தண்ணீர் அடிக்கத் தேவையில்லை.

## தொழில்நுட்ப அளவீடுகள்

| வ. எண். | தொழில்நுட்ப அளவீடுகள் | குறியீடுகள் | நிறுவனத்திற்குள் |
|---|---|---|---|
| 1 | *பரப்பளவு (Sq.m/kg/coat) [வழவழப்பான மேற்பரப்புக்குக் சிறந்தது] | டிசைனர் ரோலர் ஃபினிஷ்: 0.56-0.3<br>ஸ்பாஞ்ச் ரோலர் ஃபினிஷ்: 0.74-1.1<br>ஸ்பிரே ஃபினிஷ்: 1.34-1.86 | வீட்டுக்குள்ளேயானது |
| 2 | வாளியில் வைத்திருக்கும் நேரம் (மணி) | 1.5 - 2.0 | வீட்டுக்குள்ளேயானது |
| 3 | டென்சில் ஸ்ட்ரென்த் @28 நாட்கள் (N/mm2) | ≥0.5 | EN 1348 |
| 4 | தண்ணீர் உறிஞ்சுதல் (மிலி), 30 நிமிடங்கள், @28 நாட்கள் | ≤0.60 | கர்ஸ்டீன் டியூப் |
| 5 | மொத்த அடர்த்தி (g/cm3) | 0.9 - 1.1 | வீட்டுக்குள்ளேயானது |

*இந்த மதிப்பு வழவழப்பான மேற்பரப்புக்கானது. இருந்தாலும் இது மேற்பரப்பின் தன்மைக்கு ஏற்ப மாறக் கூடியது.

## பயன்படுத்தும் முறை:

**1. மேற்பரப்பைத் தயார் செய்தல்:**

- பொருத்தமான எமரி பேப்பர், புட்டி பிளேடு அல்லது கம்பி பிரஷ் போன்றவற்றைப் பயன்படுத்தி மேற்பரப்பில் தளர்ச்சியாக ஒட்டியுள்ள அழுக்கு, தூசி எண்ணெய் பசை போன்ற எல்லாவற்றையும் அகற்றவும்.
- டெக்ஸ்டுரா ரோலர்/ஸ்ப்ரே ஃபினிஷை பயன்படுத்துவதற்கு முன்பாக துளைகள், மேற்பரப்பில் உள்ள குறைபாடுகளான பள்ளங்கள் மற்றும் விரிசல்கள் போன்ற நிரப்ப வேண்டும்.

**2. மேற்பரப்பை முன்னதாக ஈரமாக்குதல்:**

பயன்படுத்திய அடி மூலக்கூறுடன் சிறந்த மென்மை, வேலைத்திறன், கவரேஜ் மற்றும் அதிக பிணைப்பு வலிமையைப் பெற, கான்க்ரீட் / பிளாஸ்டர் மேற்பரப்பில் ''டெக்ஸ்டுரா ரோலர் பினிஷ்'' பயன்படுத்துவதற்கு முன்பாக முன்கூட்டியே ஈரமாக்குதல் முக்கியமானது.


**3. ''டெக்ஸ்டுரா ரோலர் பினிஷ் மற்றும் ஸ்ப்ரே பினிஷ்'' கலவை:**

வெவ்வேறு பூச்சுகளுக்கு கொடுக்கப்பட்ட தண்ணீர் விகிதத்தின்படி ஒரேமாதிரியான பேஸ்ட்டை உருவாக்க, டெக்ஸ்டுரா-ஆர்எஃப்-ஐ நன்கு கலக்கவும். இதன் விளைவாக அதிக பாதுகாப்பு மற்றும் ஸ்மூத் யூனிஃபார்ம் ஷேடை பெறலாம். தயாரிப்பை தண்ணீரில் கலந்து 1-2 மணி நேரத்திற்குள் பயன்படுத்தக்கூடிய அளவை மட்டுமே தயார் செய்யவும்.


## ஸ்பாஞ்ச் ரோலர்:



ஹனிகோம்ப் ஃபினிஷ்
BWRF3004



- **40-45% தண்ணீர் சேர்க்கவும்**
- **40-45% தண்ணீர் விகிதத்தின்படி ஒரே மாதிரியான பேஸ்டை உருவாக்குவதற்கு டெக்ஸ்டுரா-ஆர்எஃப்ஐ நன்கு கலக்கவும். இதன் காரணமாக அதிக கவரேஜ் மற்றும் ஸ்மூத் யூனிஃபார்ம் ஷேடை பெறலாம்.**
- **ஸ்பாஞ்ச் ரோலரை சுத்தமான தண்ணீரில் நனைத்து, தயாரித்த பேஸ்டில் அமிழ்த்தி, விரும்பிய டிசைனை பெற, சுவரில் நேரடியாக மேற்பரப்பில் தடவவும்.**
- **எதிர்பார்க்கும் டிசைன் வகைக்கு நேரடியாக தயார் செய்த மேற்பரப்பில் ஸ்பாஞ்ச் ரோலரை மீண்டும் உருட்டவும்.**
- **பெயின்ட்/டிஸ்டம்பரை பயன்படுத்துவதற்கு முன்பாக 10-12 மணி நேரத்திற்கு மேற்பரப்பை உலர விடவும்.**
- **இறுதி ஃபினிஷை பெற ஆஃப் ஒயிட் பெயின்ட் (படத்தில் காட்டியுள்ளபடி) அல்லது உங்களுக்கு பிடித்தமான கலர் பெயின்ட் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.**




## டிசைனர் ரப்பர் ரோலர்:





அலிகேட்டர் ஃபினிஷ்
BWRF3001





சீம்லெஸ் சர்க்கிள் ஃபினிஷ்
BWRF3002






உட் கிரெய்ன் ஃபினிஷ்
BWRF3003

- 32-36% தண்ணீர் விகிதத்தின்படி ஒரே மாதிரியான பேஸ்டை உருவாக்குவதற்கு டெக்ஸ்டுரா-ஆர்எஃப்ஐ நன்கு கலக்கவும். இதன் காரணமாக அதிக கவரேஜ் மற்றும் ஸ்மூத் யூனிஃபார்ம் ஷேடை பெறலாம்.
- தயார் செய்த மேற்பரப்பில் டிரோவல் மூலமாக 1-3 மிமீ தடிமன் அளவில் தயாரிப்பைப் பயன்படுத்துங்கள்.
- ஒரேமாதிரியான மேற்பரப்பையும் சிறந்த டிசைன் அமைப்பையும் பெற, பயன்படுத்திய தயாரிப்பை டிரோவலின் மூலம் சமப்படுத்தவும்.
- ரோலரின் எளிதான இயக்கத்திற்காக மேற்பரப்பை குறைந்தது 5-10 நிமிடங்களுக்கு உலர வைக்கவும் (பாதி உலர்தல்).
- டிசைனர் ரோலரை சுத்தமான தண்ணீரில் நனைத்து, விரும்பிய டிசைன்படி மேற்பரப்பில் பயன்படுத்தவும்.
- சீம்லெஸ் சர்க்கிள் ரோலர், உட்கிரெய்ன் ஃபினிஷ் ரோலர், அலிகேட்டர் ஃபினிஷ் ரோலர் (படங்களில் காட்டியபடி) அல்லது சந்தையில் கிடைக்கும் விரும்பிய டிசைனர் ரோலரை தேர்வு செய்யவும்.
- பெயின்ட்/டிஸ்டம்பரை பயன்படுத்துவதற்கு முன்பாக 10-12 மணி நேரத்திற்கு மேற்பரப்பை உலர விடவும்.
- இறுதி முடிவைப் பெற நீங்கள் விரும்பும் எந்த கலர் பெயின்ட்டையும் பயன்படுத்துங்கள்.

## ஸ்ப்ரே பினிஷ்





பப்பிள் ஸ்ப்ரே பினிஷ்
**BWSF2-001**

- பிரஷ் அல்லது பிளாட் ரோலரைப் பயன்படுத்தி 1 கோட் பிர்லா ஒயிட் பிரைமரை அடியுங்கள்.
- 1 கோட் டெக்ஸ்டுரா ஆர்எஃப் மெட்டீரியலை (45-50% தண்ணீருடன் கலக்கவும்) பிரைமரின் மேல் பிரஷ் அல்லது ரோலர் மூலம் ஏதேனும் கலர் ஸ்டெயினரை (படத்தில் நீல பெயின்ட் போன்றவை) பேஸ் கோட் ஆகப் பயன்படுத்தவும்.
- அடிப்படை கோட் மேற்பரப்பை 3-4 மணி நேரம் உலர விடவும்.
- 42-50% தண்ணீர் சேர்த்து பிர்லா ஒயிட் ஸ்ப்ரே பினிஷ் டெக்ஸ்டுரா மெட்டீரியலை தயார் செய்து, வாடிக்கையாளர் விருப்பப்படி (படத்தில் உள்ள மஞ்சள் பெயின்ட் போன்றவை) தயாரித்த பொருளில் (ஒரே மாதிரியாக கலக்கவும்) விரும்பும் அளவு கலர் ஸ்டெயினரை சேர்க்கவும்.
- ஒரே மாதிரியான கலவைக்குப் பிறகு, ஒரே மாதிரியான மற்றும் விரும்பும் டிசைனை அடைய மேலிருந்து கீழாக காற்றில்லாத ஸ்பிரே கன்-ஐ பயன்படுத்தி மேற்பரப்பின் மேல் டெக்ஸ்டுரா ஆர்எஃப்பை பயன்படுத்துங்கள்.
- மேற்பரப்பை 10-12 மணி நேரம் உலர விடவும்.
- எந்த வகையான சேதங்களிலிருந்தும் தயாரிப்பு நீடித்து, சிறந்த பளபளப்பு மற்றும் நீண்ட கால பாதுகாப்பை அதிகரிக்க, ஒரு கோட் டிரான்ஸ்பேரன்ட் சிலிக்கான் கோட்-ஐ (பாதுகாப்பு கோட்) பயன்படுத்தலாம்.





ஆரஞ்சு பீல் ஃபினிஷ்
**BWSF2002**

- பிரஷ் அல்லது பிளாட் ரோலரைப் பயன்படுத்தி 1 கோட் பிர்லா ஒயிட் பிரைமரை அடியுங்கள்.
- 1 கோட் டெக்ஸ்டுரா மெட்டீரியலை (45-50% தண்ணீர் கலந்து) பிரஷ் அல்லது ரோலர் மூலம் பூசுங்கள்.
- அடிப்படை கோட் மேற்பரப்பை 3-4 மணி நேரம் உலர விடவும்.
- 42-50% தண்ணீர் சேர்த்து பிர்லா ஒயிட் ஸ்ப்ரே பினிஷ் டெக்ஸ்டுரா மெட்டீரியலை தயார் செய்யுங்கள்.
- ஒரே மாதிரியான கலவைக்குப் பிறகு, ஒரே மாதிரியான மற்றும் விரும்பும் டிசைனை (பப்பிள் வடிவாக) அடைய மேலிருந்து கீழாக காற்றில்லாத ஸ்பிரே கன்-ஐ பயன்படுத்தி மேற்பரப்பின் மேல் டெக்ஸ்டுரா ஆர்எஃப்பை பயன்படுத்துங்கள்.
- ஆரஞ்சு தோல் டிசைனை பெற, பயன்படுத்திய பப்பிளை டிரோவல் மூலம் அழுத்தவும்
- பெயின்ட் அல்லது டிஸ்டம்பரைப் பயன்படுத்துவதற்கு முன்பாக 10-12 மணி நேரத்திற்கு மேற்பரப்பை உலர விடவும்.
- இறுதி ஃபினிஷை பெற மேற்பரப்பின் மேல் மெடாலிக் சில்வர் கலரை (படத்தில் காட்டப்பட்டுள்ளபடி) அல்லது விரும்பிய கலரை அதன் மேல் பூசவும்.
- எந்த வகையான சேதங்களிலிருந்தும் தயாரிப்பு நீடித்து, சிறந்த பளபளப்பு மற்றும் நீண்ட கால பாதுகாப்பை அதிகரிக்க, ஒரு கோட் டிரான்ஸ்பேரன்ட் சிலிக்கான் கோட்-ஐ (பாதுகாப்பு கோட்) பயன்படுத்தலாம்.

**முன்னெச்சரிக்கைகள்:**

- உறுதியாக, சுத்தமாக, உலர்ந்த மற்றும் மேற்பரப்பில் இந்தத் தயாரிப்பின் ஒட்டும் தன்மையைப் பாதிக்கக் கூடிய படிமங்கள்/ அழுக்குகள் இல்லாத மேற்பரப்பில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதிக ஈரப்பதம் அல்லது அதிக போக்குவரத்து உள்ள பகுதிகளில் சிமென்ட்டை அடிப்படையாகக் கொண்ட சீலரை பயன்படுத்தப் பரிந்துரைக்கப்படுகிறது.

- எப்போதுமே டெக்ஸ்டராவை பையிலிருந்து எடுக்கும் முன்பாக பையை நன்றாகக் குலுக்கவும்.

- பிர்லா ஒயிட் விரைவாக உலர்வதைத் தவிர்க்க பயன்படுத்தும் முன்பாக ஈரப்படுத்துவது கண்டிப்பானதாகும்.

- வெப்பநிலை 10˚ C-க்கும் குறைவாக அல்லது பயன்படுத்திய 4 மணிநேரத்திற்குள்ளாக வெப்பநிலை அந்த அளவிற்கு குறையலாம் என்று இருக்கும்பொழுது பயன்படுத்தக் கூடாது.

- மெலிதாக கரைக்க வேண்டியதில்லை. 60 நிமிடங்களுக்குள்ளாக பயன்படுத்தும் அளவு தேவையான அளவிலான கலவையை மட்டுமே தயார் செய்ய வேண்டும்.

- நீண்ட நேரத்திற்கு பிர்லா ஒயிட் டெக்ஸ்டராவை திறந்து வைக்கக் கூடாது.

- தொடர்ச்சியாக நீர்க்கசியும் அல்லது ஈரப்பதத்துடன் இருக்கும் மேற்பரப்புகளில் தயாரிப்பைப் பயன்படுத்த முடியாது.

- பயன்படுத்தும் முன்பாக நன்றாகக் கலக்கவும்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்:**

- பிர்லா ஒயிட் டெக்ஸ்டரா-டிஎஃப் மற்றும் டெக்ஸ்டரா ஆர்எஃப்/ எஸ்எஃப் பைகளை உலர்ந்த மற்றும் குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் வைக்கவும்.

- விழுங்கினால் தீங்கு விளைவிக்கலாம். விழுங்கி விட்டால் உடனடியாக மருத்துவப் பராமரிப்புப் பெறவும்.

- பயன்படுத்தும்பொழுது கண்களை பாதுகாக்கும் உபகரணத்தைப் பயன்படுத்தவும்.

- கண்களில் பட்டு விட்டால், உடனடியாக ஏராளமான தண்ணீர் விட்டுக் கழுவவும். மேலும் மருத்துவ அறிவுரை பெறவும். சருமத்தில் பட்டால், உடனடியாக சோப்பு மற்றும் ஏராளமான தண்ணீர் விட்டு சருமத்தைக் கழுவவும்.

- எரிச்சல் ஏற்பட்டால் அல்லது விடாது நீடித்தால் மருத்துவக் கவனிப்புப் பெறவும். ஆவி அல்லது ஸ்பிரேயை உட்சுவாசிக்கக் கூடாது.

- மேற்பரப்பை தயார் செய்யும்பொழுது தூசியை உட்சுவாசிப்பதை தவிர்க்க பொருந்தும் நோஸ் பேடை அணிந்து கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.



**பிர்லா ஒயிட் - அல்ட்ராடெக் சிமென்ட் லிமிடெட் நிறுவனத்தின் ஒரு நிறுவனம்**
9வது தளம், பிர்லா சென்சுரியன், பாண்டுரங்க புத்கர் ரோடு, ஒர்லி, மும்பை – 400030
தொலைபேசி எண்கள்: 022- 68540444 / 50365111

இணையதளம்: www.birlawhite.com | கட்டணமில்லா எண்.: 1800 11 1717
www.facebook.com/BirlaWhiteCement | twitter.com/BirlaWhite

**இங்கே ஸ்கேன் செய்யவும்**

